

# தேசத்தில் வாழ்தல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோசுவா 22; எபே 6:7; யோவான் 7:24; எண் 25; நீதி 15:1; 1பேதுரு 3:8,9.

**மனன வசனம்:** மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். நீதிமொழிகள் 15:1.

கூட்டமாக வாழும்போது சிலசமயங்களில் சண்டைகள், பதற்றம் உண்டாகலாம். திருச்சபை போன்ற சமுகத்தில் இது உண்மை. ஏனென்றால் அங்கு வெவ்வேறு பின்னணிகளை, சமுதாய அந்தஸ்துகளைச் சேர்ந்த மக்கள் இருப்பார்கள். அவர்கள் முற்றிலும் வித்தியாசமான கலாச்சாரங்களில் வளர்ந்தவர்களாகவும் இருக்கலாம்; அப்படிப்பட்டவர்கள் ஒரே இடத்தில் வசித்து, பொதுவான ஒரு நோக்கத்திற்காக வேலைசெய்யும்போது அவ்வாறு நேரிடுகிறது.

மக்கள் மத்தியில் உண்டான மிகப்பெரிய தவறான புரிதல்பற்றி யோசுவா 22 சொல்வதை இந்த வாரம் ஆராய்வோம். யோசுவா புத்தகத்தின் துவக்கத்தில், யோசுவா சில கோத்திரத்தாரிடம் யோர்தான் நதியைக் கடந்துசென்று, யோர்தானின் மேற்கே இருந்த கோத்திரத்தாருடன் சேர்ந்து போருக்குச் செல்லும்படி கூறுகிறார். யோசுவா 1:12-18. அந்த வேலை முடிந்ததும், அங்கிருந்து திரும்புகிறார்கள். அப்போது யோர்தானுக்கு கிழக்கே பலிபீடம் ஒன்றைக் கட்டுகிறார்கள். அதனால் யோர்தானின் மேற்கே இருந்த கோத்திரத்தார் கவலையடைகிறார்கள். மற்றவர்களுடைய நடவடிக்கைகள்குறித்து அவசரப்பட்டு முடிவுக்கு வருவது ஏன் ஆபத்தானது? நாம் எவ்வாறு திருச்சபையில் ஒற்றுமையைப் பேண முடியும்?

நாம் கவனச்சிதறல்களுக்கு இடமளிக்காமல், நம் அழைப்பின் பெரிய காட்சியை மனதில் வைத்திருப்பது ஏன் முக்கியம்? இதுபோன்ற சில கேள்விகளை இந்த வாரம் ஆராய்வோம்.

*2025, டிசம்பர் 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# அர்ப்பணிப்பு

**ரூபனியர்கள், காத்தியர்கள், மனாசேயின் பாதி கோத்திரத்தார் ஆகியோரின் அர்ப் பணிப்புபற்றி யோசுவா 22:1-8 சொல்வது என்ன?**

யோர்தானுக்கு அப்புறத்திலிருந்த கோத்திரத்தார் மோசேயும் தானும் அறிவித்த கடமைகளை முற்றிலும் நிறைவேற்றியதாகவும், அதனால் இஸ்ரவேலின் பொதுநன்மைக்குமுக்கியப்பங்காற்றினதாகவும்யோசுவாஉறுதிப்படுத்துகிறார். அவர்கள் தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து 'நெடுநாளாய்' யுத்தம் பண்ணினார்கள்; அது கிட்டத்தட்ட ஆறு, ஏழு வருடங்கள் ஆகும். யோசு 11:18;14:10; உபா 2:14. தங்கள் மனைவிகள், பிள்ளைகளை யோர்தானுக்கு கிழக்கே விட்டுவிட்டு வந்திருந்தார்கள்; போரில் காயம், மரணம் ஆகிய அச்சுறுத்தல்கள் இருந்த நிலையிலும், தங்கள் சகோதரர்களுடன் சேர்ந்து உண்மையுடன் போரிடத் தீர்மானித்தார்கள்.

தேசத்தில் காணப்படவேண்டிய ஒற்றுமையை இந்த வசனங்கள் மறைமுகமாக வலியுறுத்துகின்றன. ஒற்றுமையை வலியுறுத்துகிற மற்றுமொரு சம்பவம் தொடர்ந்து நிகழ்கிறது. யோர்தானுக்கு மேற்கேயிருந்த கோத்திரங்களுக்கும் கிழக்கேயிருந்த கோத்திரங்களுக்கும் இடையே யோர்தான் குறுக்கே இருந்த நிலையில், ஒற்றுமையைப் பேணமுடியுமா? தங்கள் தேசிய அடையாளத்தில் நிலப்பரப்பு தலையிட அனுமதிப்பார்களா? அல்லது தேவன் தெரிந்துகொண்ட தேசத்தாராக தாங்கள் ஒரே தேவனைத் தொழுவதை உணர்ந்து, அவரது ஆளுகையின் வழிநடத்துதலின்கீழ் ஒற்றுமையும் உறுதியோடும் இருப்பார்களா?

அப்படிப்பட்ட அன்புறுதிக்கு ஒரே வழிதான் இருக்கிறதென யோசுவா விளக்குகிறார்; தாங்கள் தங்கள் சக இஸ்ரவேலர்களை அல்ல, யாவேயைச் சேவிப்பதையும், அவரே தங்களுக்கு ஊழியக்கட்டளையைக் கொடுத்திருப்பதையும் உணர்வதே அது.

புதிய ஏற்பாட்டில் இதே நியதியைப் பார்க்கிறோம். மனிதர்களுக்கு மட்டுமல்ல, தேவனுக்கே சேவைசெய்வதுபோல கிறிஸ்தவர்கள் வேலைசெய்யும்படி பவுல் அறிவுறுத்துகிறார். எபே 6:7; கொலோ 3:23; 1 தெச 2:4. பிரபஞ்சத்தின் சிருஷ்டிகருக்காக வேலைசெய்வதைவிட பெரிய அழைப்பு என்ன இருக்கிறது?

அனுதின வாழ்க்கையில், நாம் எதிர்கொள்கிற சவால்களும் கஷ்டங்களும் எளிதில் நம்மை அதைரியப்படுத்தி, போராட்டத்திலிருந்து விலகவைக்க முயல்கின்றன. அவ்வாறு செய்வது சிலசமயங்களில் எளிதாகவும் இருக்கிறது. ஆனாலும், நம்மோடு இருப்பதாகவும், தாம் சொல்கிறபடி செய்யவைப்பதற்கான திறனைக் கொடுப்பதாகவும் வாக்குரைக்கிற தேவனுடைய வல்லமையை நாம் கேட்கலாம். நம்முடைய உன்னதமான அழைப்பை எப்போதும் மறக்காமல் இருந்தால், விழுந்துபோன நிலையில் தவிர்க்கமுடியாமல் எழுகிற சவால்கள் அதைரியங்கள் மத்தியில் நாம் தொடர்ந்து செல்வதற்கான ஊக்கம் கிடைக்கும்.

---

**திரும்ப ஊருக்குப் புறப்பட்ட கோத்திரத்தாரிடம் தேவனுக்கு உண்மையாக இருக்கும்படி வேண்டிக் கொண்டு, யோசுவா அவர்களை ஆசீர்வதித்ததாக யோசுவா 22:5,6 சொல்கிறது. பொதுவாக நாம் செய்வதைவிட அதிகமாக ஒருவருக்கொருவர் ஜெபித்தால், திருச்சபையில் நமது உறவுகள் எவ்வாறு மாறக்கூடும்?**

# குற்றச்சாட்டுகள்

**ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்த கோத்திரத்தாரின் அனுபவத்தை யோசுவா 22:9-20 இல் வாசியுங்கள். யோர்தானுக்கு கிழக்கில் இருந்த கோத்திரத்தார்மீது யோர்தானுக்கு மேற்கில் இருந்த கோத்திரத்தார் வைத்த குற்றச்சாட்டுகள் என்ன? அந்தக் குற்றச்சாட்டுகள் எந்த அளவுக்கு உண்மையாக இருந்தன?**

---

1ஆம் வசனத்தில், யோர்தானுக்கு கிழக்கில் இருந்த கோத்திரத்தார் ரூபனியர்கள், காத்தியர்கள் என்று தங்கள் பொதுவான பெயரில் அழைக்கப்படுகிறார்கள்; ஆனால் இங்கு, 'ரூபன் புத்திரர்', 'காத் புத்திரர்', 'மனாசேயின் பாதிக் கோத்திரத்தார்' என்று வித்தியாசமாக அழைக்கப்படுகிறார்கள். அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டது 'இஸ்ரவேல் புத்திரர்' என்று வருகிறது. யோசு 22:11. எனவே இரண்டும் ஒரே கூட்டத்தார் அல்ல என்பது தெரிகிறது.

'இஸ்ரவேல் புத்திரரின் சபையாரெல்லாரும்' என்கிற வார்த்தைகள், ஒன்பது கோத்திரங்களையும், யோர்தானுக்குகிழக்கிலிருந்த பாதி கோத்திரத்தாரையும் மட்டுமே குறிப்பிடுகிறது; இரண்டு கூட்டத்தாருக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டிருந்தது புரிகிறது. நதிக்கு கிழக்கில் இருந்த கோத்திரத்தாரை இஸ்ரவேலர்களாகப் பார்க்கமுடியுமா என்கிற கேள்வி அங்கே எழுந்ததை அச் சம்பவம் காட்டுகிறது.

இறுதியில் சுமுகமான தீர்வு ஏற்பட்டிருக்கும் என்று நாம் நினைக்கலாம்; ஆனால் கிழக்கிலிருந்து வந்த கோத்திரத்தார் யோர்தானுக்கு அருகே ஒரு பலிபீடத்தைக் கட்டியதால் பதற்றம் உண்டாகிறது. அதற்கான காரணத்தையோ அந்தப் பலிபீடத்தின் பயனையோ அத்துடன் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட செயலையோ வசனம் குறிப்பிடவில்லை. யோசுவா 3,4ம் அதிகாரங்களில், முதல்முறை யோர்தானைக் கடந்தபோது நடந்ததை அறிந்திருந்தால், ஏன் அப்படிச் செய்தார்கள் என்கிற கேள்வி அதிகரிக்கும். அப்போது யோர்தானைக் கடந்து கானானுக்குச் செல்வதற்காக அதன் அருகே வந்தார்கள். இப்போது, எதிர் திசையில் கடப்பதற்காக வந்திருந்தார்கள்.

இரண்டு சம்பவங்களிலும், கற்களை வைத்து ஒன்றைக் கட்டினார்கள். முதலில் கட்டினது நினைவுச்சின்னம், இரண்டாவது கட்டியது, ஒரு பெரிய பலிபீடம். 'இந்தக் கற்களின் பொருள் என்ன?' என்கிற கேள்வி எழுகிறது. ஒப்பிடவும்: யோசு 4:6,22. இந்தப் பலிபீடம் கட்டப்பட்டது பலியிடுவதற்கா அல்லது நினைவுச்சின்னமாகவா? இந்தக் கோத்திரத்தாரும் தேவதுரோகத்தில் விழ ஆரம்பித்திருந்தார்களா?

யோசுவாவிடம் கலந்தாலோசிக்காமல் எலெயாசார் அல்லது கோத்திரத் தலைவர்கள் பயங்கரமான ஒரு சண்டையை உருவாக்கக்கூடிய தப்பெண்ணத்திற்கு வழிவகுக்கிறார்கள்.

---

**மற்றவர்களை நியாயந்தீர்ப்பதைத் தவிர்க்கும்படி இயேசுவும் பவுலும் வலியுறுத்துவதின் அர்த்தம் என்ன? லூக் 6:37; யோவான் 7:24; 1கொரி 4:5. மற்றவர்களுடைய நோக்கங்கள்குறித்து தவறான தீர்மானங்களுக்கு வருவது ஏன் எளிதாக இருக்கிறது?**

# கடந்தகாலத்தால் வாதிக்கப்படுதல்

**இப்போது எண் 25இன் வெளிச்சத்தில், யோசுவா 22:13-15ஐ மீண்டும் வாசியுங்கள். அந்த இரண்டரை கோத்திரங்களின் மனிதரைச் சந்திக்கச் சென்ற பிரதிநிதிகளுக்கு இஸ்ரவேலர்கள் பினெகாசை தலைவராகத் தெரிந்துகொண்டது ஏன்?**

சுதந்தரப் பிரகடனம் செய்யப்பட்டதாக வதந்தி கிளம்பியிருந்தது. அதை உறுதிப்படுத்துவதற்கு, 'இஸ்ரவேலின் புத்திரர்கள்' என்று இரண்டுமுறை குறிப்பிடப்படுகிற ஒன்பதரை கோத்திரத்தார், அந்தப் பலிபீடத்தைக் கட்டினதற்கான நோக்கத்தையும் அர்த்தத்தையும் அறிந்துகொள்ள பிரதிநிதி குழு ஒன்றை அனுப்புகிறார்கள். அந்தக் குழுவில் பிரதான ஆசாரியனாகிய எலெயாசாரின் மகன் பினெகாசும் இருந்தான்; எலெயாசாருக்கு பிறகு பிரதான ஆசாரியனாகக்கூடியவன். யோசு 24:33. பாகால்பேயோரில் இஸ்ரவேலரின் வேசித்தனத்திற்கு முடிவு கட்டினதில் ஆசாரியனாகிய பினெகாசுக்கு நற்பெயர் இருந்தது. எண் 25.

'அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து, இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம்பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று'. எண் 25:7,8.

பினெகாசுக்கு கொஞ்சம் செல்வாக்கு இருந்தது உண்மைதான். அவருடன் சென்ற மற்ற தூதுவர்கள் யோர்தானுக்கு மேற்கிலிருந்த ஒன்பதரை கோத்திரத்தாரிலிருந்து வந்த பிரதிநிதிகள்; இஸ்ரவேல் வம்சங்களில் கோத்திரத்திற்கு ஒரு குடும்பத்தின் தலைவர்கள்; அதாவது, 'தன் தன் பிதாவின் குடும்பத்துக்குத் தலைவனாய்' இருந்தவர்கள். தெய்வநிந்தனை மற்றும் கலகம் ஆகிய குற்றச்சாட்டுகளை 'சொல்லுகிறது என்னவென்றால்' என்று தீர்க்கதரிசன பாணியில் முன்வைக்கிறார்கள். (யோசுவா 22:16, சமகால மொழிபெயர்ப்பு).

இங்கு வித்தியாசம் என்னவென்றால், பேசுவது கர்த்தர் அல்ல, மாறாக 'கர்த்தருடைய சபையார் எல்லாரும்'. வச 20. மீறுதல், துரோகம், கலகம் ஆகிய குற்றச்சாட்டுகளை வைத்தார்கள். 'மீறுதல்' என்பதற்கான அதே எபிரெய வார்த்தைதான் ஆகானின் பாவத்தை விவரிப்பதிலும் வருகிறது. யோசு 7:1. அந்த வார்த்தை மோசேயின் முதல் ஐந்து புத்தகங்களில் பல இடங்களில் வருகிறது. உதாரணமாக, லேவி 5:15; 6:2; எண் 5:6,12. ஆகான் மற்றும் பாகால்பேயோரின் அனுபவங்களை துரோகத்திற்கும் கலகத்திற்கும் உதாரணங்களாகக் காட்டிப் பேசுகிறார்கள். அதிகாரப்பூர்வ அனுமதியின்றி கட்டப்பட்ட அந்தப் பலிபீடம் தேவதுரோகம், விக்கிரகாராதனை, தீயொழுக்கம் ஆகியவற்றிற்கு வழிநடத்தி, இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் தேவகோபத்தை வருவிக்கக்கூடுமோ என்று ஒன்பதரை கோத்திரத்தாரும் பயந்தார்கள்.

---

**நம் கடந்தகால மோசமான அனுபவங்கள் எதிர்காலத்தில் அதுபோன்று நடக்கிற சம்பவங்களை நாம் கையாளுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நம் கடந்தகால துயரங்கள் தற்சமயம் நம்மைச் சுற்றியுள்ளவர்களை நாம் நடத்துகிற விதத்தைத் தீர்மானிக்காதபடி தேவகிருபை எவ்வாறு உதவமுடியும்?**

# மெதுவான பிரதியுத்தரம்

**நீதி 15:1இன் வெளிச்சத்தில் யோசுவா 22:21-29ஐ வாசியுங்கள். கிழக்குப்பகுதி யின் கோத்திரத்தார் சொன்ன பதிலிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?**

குற்றஞ்சாட்டினவர்களைப்போலவே குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் நேரடி யாக, வலுவாகப் பதிலளிக்கிறார்கள்; அதுதான் அந்த அதிகாரத்தின் மையப் பொருளாக உள்ளது. அதுவரை, அந்தக் கோத்திரத்தார் அந்தக் குற்றச்சாட்டு களுக்குப் பதிலளிக்காமல், தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அமைதி யாகக் கேட்டார்கள். குற்றச்சாட்டுகளின் தீவிரத்தின் அடிப்பைடயில், அவர்கள் காட்டிய பொறுமை நல்ல எடுத்துக்காட்டாக, பின்வரும் நீதிமொழியின் அர்த் தத்தை விளக்குவதாக உள்ளது: 'மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.' நீதி 15:1.

ஏல், எலோஹிம், யாவே எனும் இஸ்ரவேலின் தேவனுடைய தெய்வீக பெயர்களைச் சொல்லி பதிலளிக்க ஆரம்பிக்கிறார்கள். யோசு 22:22. இஸ்ர வேலில் உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்திருக்கக்கூடிய சந்தேகங்களையும் தவறான குற்றச்சாட்டுகளையும் போக்குகிற வகையில் தேவன்பேரில் ஆணை யிடுகிற வகையில் அந்தப் பெயர்களை இருமுறை சொல்கிறார்கள். அந்தச் சூழ் நிலையை தேவன் அறிவார் என்றும், அங்கு வந்திருந்த பிரதிநிதிகளும் அதைப் புரிந்துகொள்வார்கள் என்றும் நம்பினார்கள். தாங்கள் குற்றம்செய்திருந்தால், தேவன் தங்களைப் பழிவாங்கட்டும் என்று சொன்னதால், தேவனுக்குமுன் தாங் கள் பொறுப்புள்ளவர்களாக இருந்ததையும் அந்த இரண்டரை கோத்திரத்தாரும் உணர்ந்திருந்தார்கள். உபா 18:19; 1சாமு 20:16.

ஒரு ஆச்சரியமான உண்மை வெளிப்படுகிறது; ஒரு பலிபீடமானது பலி யிடுகிற இடமாகமட்டுமே இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதால், அவர் கள்மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டு காரணமற்றது என்பது ஒருபுறம் தெரிய வருகிறது. இன்னொரு புறம், அவர்களது மெய்யான நோக்கமும் வெளிப்படு கிறது. தேவதுரோகத்தால் அல்ல, இஸ்ரவேலைவிட்டுப் பிரிந்துவிடக்கூடாது என் பதற்காகவே அவ்வாறு செய்திருந்தார்கள். எனவே, அந்தப் பலிபீடத்தைக் கட்டினது அவர்கள் எண்ணியிருந்ததுபோல தேவதுரோகத்திற்கான ஆதாரமல்ல. உண்மையில், அதற்கு முற்றிலும் எதிரானது: மேற்குப் பகுதி கோத்திரத்தாரிடம் காணப்பட்ட அதே தேவபயம்தான் இவர்களை இவ்வாறு செய்யவைத்திருந்தது. இஸ்ரவேலரின் ஒற்றுமைக்கு மெய்யான அடித்தளம் நிலப்பரப்போ உலகப்பிர காரமான சுதந்தரத்தின் அளவோ அல்ல, மாறாக கர்த்தருடைய நிபந்தனை களுக்கு ஆவிக்குரிய ரீதியாக மெய்ப்பற்றுடன் இருப்பதுதான்.

கிழக்குப்பகுதியின் கோத்திரத்தார் தவறிழைக்கவில்லை என்று தெரிந்த தும், மேற்கு பகுதியின் கோத்திரத்தார் மகிழ்ச்சியடைந்ததார்கள்; எனவே உண் மையான அக்கறை இருந்திருக்கிறது. தங்கள் சகோதரர்களுடைய பேச்சுக்கு மறுபேச்சுப் பேசமுடியவில்லை என்று நினைக்கவில்லை; மாறாக, தாங்கள் சந் தேகப்பட்டது தவறு என்பதை உணர்ந்து சந்தோஷப்பட்டார்கள். இஸ்ரவேலில் உள்நாட்டுப் போர் தவிர்க்கப்பட்டது; தேசத்தின் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டது.

---

**பொய்யான குற்றச்சாட்டுகளை எவ்வாறு கையாளுகிறீர்கள்? உங்கள் மனநிலையைக் கட்டுப் படுத்துகிற சில நியதிகளைப் பகிருங்கள். சங் 37:3-6,34,37.**

# சச்சரவுக்கான தீர்வு

**சச்சரவுக்குத் தீர்வு காண்பதற்கும், திருச்சபையில் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும் உதவியாக இந்த ஒட்டுமொத்த சம்பவமும் வலியுறுத்துகிற சில கருத்துகள் என்ன? சங் 133; யோவான் 17:20-23; 1 பேதுரு 3:8,9.**

தகவல்தொடர்பு சம்பந்தப்பட்ட பல நியதிகள் யோசுவா 22இன் சம்பவத்தில் உள்ளன; குடும்பத்திலும் திருச்சபையிலும் சமூகத்திலும் அனுதின மனித உறவுகளில் அவற்றைப் பயன்படுத்தமுடியும்.

1. தவறு நடந்தால் அல்லது நடப்பதுபோலத் தெரிந்தால், நமக்குள்ளேயே அடக்கி, பூதாகாரமாக வெடிக்கிற நிலை வருவதற்குள் அதைப் பேசிவிட வேண்டும். பிரச்சினை உருவாவதுபோலத் தெரியும்போது, தேவபிள்ளைகள்கண்டுகொள்ளாமல்இருக்கக்கூடாது. யோர்தானுக்குஅப்புறத்திலிருந்த கோத்திரத்தார் தாங்கள் ஒரு பலிபீடத்தைக் கட்ட எண்ணியிருந்ததை முன்னரே சொல்லியிருந்தால் அந்தப் பிரச்சினையே எழுந்திருக்காது.
2. ஒருவர் தாங்கள் நினைத்ததை உறுதியாகச் சொன்னதுமே, அவசரப்பட்டு முடிவுகளுக்கு வரக்கூடாது. மேற்கில் இருந்த கோத்திரத்தார் தங்கள் காதுகளுக்கு எட்டின வதந்தியை உடனே நம்பினார்கள். கிழக்கில் இருந்த கோத்திரத்தார் தேவதுரோகம் செய்துவிட்டதாக தவறான முடிவுக்கு வந்தார்கள்.
3. தீர்மானங்களுக்கு வருவதற்குமுன் உண்மையான பிரச்சினையாக இருந்தாலும், பிரச்சினைபோலத் தோன்றினாலும், அதைப் பேசிவிடுங்கள்.
4. ஒற்றுமையை உண்டாக்குவதற்கு தியாகம்செய்ய ஆயத்தமாயிருங்கள். யோர்தானுக்கு அப்புறத்தில் இருப்பதால் தேவதுரோகம் செய்கிறார்களோ என்று எண்ணியதால், அவர்களைக் குடியமர்த்துவதற்கு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் ஒரு பங்கைக் கொடுப்பதற்கு மேற்கிலிருந்த கோத்திரத்தார் தயாராக இருந்தார்கள்.
5. குற்றச்சாட்டு தவறோ உண்மையோ, மெதுவான பிரதியுத்தரம் கோபத்தைப் போக்குகிறது. குற்றச்சாட்டிற்கு பதில் குற்றச்சாட்டைத் தொடுப்பது ஒருபோதும் சமாதானத்திற்கு வழிநடத்தாது. உங்களைப் புரியவைக்க முயல்வதற்குமுன் நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.
6. மீண்டும் சமாதானம் உண்டானதும், மகிழ்ந்து, தேவனைப் போற்றுங்கள். இரண்டரை கோத்திரத்தாரின் உண்மையான நோக்கத்தை அறிந்ததும், பிரதான இஸ்ரவேலின் சபையார் மெய்யான மகிழ்ச்சியடைந்தார்கள். தாங்கள் எண்ணியிருந்ததுதான் சரியென்கிற அகந்தையில், தாங்கள் சொல்வதில் தவறே இருக்காது என்று பிடிவாதம் காட்டவில்லை.

யோர்தானுக்குக் கிழக்கிலிருந்த கோத்திரத்தார் தேவதுரோகம் செய்திருந்தால், இஸ்ரவேல் மக்கள் உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி நடந்திருப்பார்கள். ஒற்றுமை என்கிற பெயரில் சத்தியத்தில் சமரசமாவதோ வேதாகம நியதிகளை ஒதுக்குவதோ கூடாது. ஆனாலும், ஒப்புரவாக்குதலுக்கான முயற்சிகளும், தேவ வார்த்தையின்படி சரிசெய்ய போதகர் எடுக்கிற முயற்சிகளும் பலன்கொடுக்காதபோது முதல்படியாக அல்ல, கடைசிப்படியாக சபை ஒழுங்கு நடவடிக்கையில் இறங்கவேண்டும். இந்த எளிய நியதிகளை எப்போதும் கடைப்பிடித்தால் நம் திருச்சபைகள் எவ்வளவு வித்தியாசமாகக் காணப்படும்!

# மேலும் படிக்க:

“பாவத்தை மெத்தனமாக கையாள்வதைத் தவிர்க்கவேண்டும்; இரக்கமற்ற தீர்ப்பையும் அடிப்படையற்ற சந்தேகத்தையும் புறந்தள்ளவேண்டும்; இரண்டும் சம அளவு முக்கியம்...

‘ரூபனியர்களும் அவர்களது சகாக்களும் ஞானமாக நடந்துகொண்டது, நாம் பின்பற்றத் தகுதியானது. மெய்ப்பக்தியின் நோக்கத்திற்காக நேர்மையாக நடக்க முயன்ற நிலையில், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, கடும் கண்டனத்திற்கு ஆளானார்கள்; ஆனாலும் மனக்கசப்பை வெளிப்படுத்தவில்லை. தங்கள் நியாயத்தைச் சொல்வதற்குமுன் தங்கள் சகோதரர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு மனிதாபிமானத்தோடும் பொறுமையோடும் செவிகொடுத்து விட்டு, தங்கள் நோக்கங்களை புரியும்படி விளக்கினார்கள். தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதைக் காட்டினார்கள். கடும் விளைவுகளை ஏற்படுத்துவதுபோலத் தோன்றிய சிக்கல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

‘தங்கள்மீது நியாயம் இருக்கும்போது தவறாகக் குற்றஞ்சாட்டப்படுபவர்கள் அமைதியோடும் அக்கறையோடும் நடக்கவேண்டும். மனிதர்கள் தவறாகப் புரிந்துகொண்டு, தவறாக அர்த்தங்காண்கிற அனைத்தும் தேவனுக்கு நன்றாகத் தெரியும். நாம் நம் விஷயத்தை பாதுகாப்பாக அவரது கரங்களில் விட்டுவிடலாம். அவர் ஆகானின் குற்றத்தை ஆராய்ந்து அறிந்ததுபோல தம்மில் நம்பிக்கைவைக்கிறவர்களுடைய வழக்கையும் நிச்சயமாக நியாயந்தீர்ப்பார்.

‘தம் மக்கள் மத்தியில் சகோதர அன்பும் ஒற்றுமையும் காணப்படவேண்டும் என்பது தேவசித்தம். தாம் சிலுவையில் அறையப்படுவதற்குமுன் கிறிஸ்து ஏறெடுத்த ஜெபத்தில், பிதா தம்மை அனுப்பினதை உலகத்தார் விசுவாசிக்கும்படி தாமும் பிதாவும் ஒன்றாயிருப்பதுபோல அவர்களும் ஒன்றாயிருக்க கேட்டுக்கொண்டார். மனதைத் தொடுகிற, அற்புதமான இந்த ஜெபம், யுகங்கள் கடந்து, நம் காலத்திற்கும் பொருந்தும்; ஏனெனில் அவர் “நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்” என்று ஜெபித்தார். யோவான் 17:20. சத்தியத்தின் ஒரு நியதியைக்கூட நாம் பலியாக்கிவிடக்கூடாது, அதேநேரம் இந்த ஐக்கியத்தின் நிலையை எட்டுவதே எப்போதும் நம் நோக்கமாக இருக்கவேண்டும்’.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *‘மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் (உங்களிலும்) மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்’ என்கிற அறிவுரை, நம் சகோதர சகோதரிகளைப்பற்றி நாம் தீமைபேசவிடாமல் நம்மை எவ்வாறு தடுக்கவேண்டும்? பிலி 2:3.*
2. *நம் கடந்தகால தோல்விகள் அல்லது தவறுகள்நிமித்தம் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் நாம் எல்லைமீறி நடந்துகொள்வது ஏன்? இதை எவ்வாறு தவிர்க்கலாம்?*
3. *மற்றவர்களுடைய கருத்தையும் கேட்கவேண்டியதின் முக்கியத்துவம்பற்றி விவாதியுங்கள். நம் திருச்சபையில் காதுகொடுத்துக் கேட்கிற மனநிலையை வளர்ப்பதற்கு என்ன செய்யலாம்? யாக் 1:9.*
4. *பணி, குடும்பப் பொறுப்புகள், திருச்சபை சம்பந்தப்பட்ட கடமைகள், பிற கடமைகள் ஆகியவற்றால் திக்குமுக்காடிப்போகிற ஒரு சமுதாயத்தில் வாழ்கிறோம். அனைத்தையும் கர்த்தருக்கே செய்வதுபோல செய்யவேண்டும் என்கிற நியதி எவ்வாறு நம்மை அதிக பொறுப்புள்ளவர்களாக மாற்றுகிறது, மேலும் மனச்சமாதானத்தைக் கொடுக்கிறது?*

# ஊழியம்: தேவனுடைய உதவுகிற கரம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

1000 நற்செய்தியாளர் இயக்கமானது கிம் சன்னை பிலிப்பைன்ஸிலிருந்த தொலை தூரப் பகுதி ஒன்றிற்கு ஊழியத்திற்கு அனுப்பியது. 10 மாதங்கள் ஊழியம் செய்யவேண்டும் அது எப்படி முடியுமோ என்று கிம் சன்னிற்கு யோசனையாக இருந்தது. தன் பெற்றோருடன் ஐந்து வருடங்கள் விவாதம்செய்தும் பலன் கிடைக்காமல் இருந்த அனுபவமும் ஞாபகத்திற்கு வந்தது. 10 மாத ஊழியத்தில் என்ன செய்துவிடமுடியுமென யோசித்தார்.

ஜெபித்தபோது, ‘ஆரம்பத்திலேயே வேதாகமம்பற்றிப் பேசினால், என் பெற்றோர்போல பலர் அதைப் புறக்கணிக்கலாம். முதலில் நான் இயேசுவைப்போன்ற குணத்தை வெளிப் படுத்த வேண்டும்’ என்று யோசித்தார்.

தான் ஊழியத்திற்கு வந்திருப்பதாக யாரிடமும் சொல்லக்கூடாது, யாரிடமும் வேதா கமக் கோட்பாடுகள்பற்றிப் பேசக்கூடாது என்று நினைத்தார். மூன்று மாதங்களுக்கு அங் கிருந்தவர்களிடம் நட்பாகப் பழக ஆசைப்பட்டார்.

அந்தத் தொலைதூர பட்டணத்தைச் சென்றடைந்த பிறகு, அங்கிருந்த 20–30 வீடு களைச் சந்தித்து, அவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா என்று விசாரித்தார்.

“ஏதாவது உதவி தேவைப்பட்டால் சொல்லுங்கள். உங்களுக்கு உதவ விரும்புகிறேன்” என்று முதல் வீட்டில் சந்தித்த பெண்ணிடம் சொன்னார். தனக்கு தேவைப்பட்ட உதவியை அவர் சன்னிடம் சந்தோஷமாகச் சொன்னார். இவ்வாறு அவர் உதவிசெய்கிற செய்தி அக்கம் பக்கத்தில் பரவியது. சீக்கிரமே பலர் அவரிடம் உதவி கேட்டு வந்தார்கள். முதல் வீட்டில் அவர் உதவிசெய்த பெண்மணி, சன்னுக்கு மதிய உணவும் இரவும் உணவும் கொடுத்தார். முதல் நாளிலேயே அக்கம்பக்கத்தில் 17 பேருக்கு உதவிசெய்தார்.

சன் வீட்டிற்குத் திரும்பியபோது, மிகவும் களைப்படைந்தார். உடனே ‘நான் ஒரு ஊழியக்காரன்’ என்கிற எண்ணம் எழுந்தது. திங்கள்முதல் வெள்ளிவரை காலையில் இரண்டு வீடுகள், மாலையில் இரண்டு வீடுகள் எனச் சந்தித்தார்.

அந்தப் பட்டணத்தின் மக்களுக்கு வேறு வகையிலும் உதவியாக இருந்தார். மக்காச் சோளம் வளர்த்து, அங்கிருந்தவர்களுக்குக் கொடுத்தார். அதற்கு விலை என்ன கேட்ட வர்களிடம், ‘வேண்டாம். மக்காச்சோளம் தேவனிடமிருந்து வந்தது. தேவன் அதற்கு விலை கொடுத்துவிட்டார்’ என்று சொன்னார். ஒருமுறை, ஒரு பையனுடைய காலில் புண் இருந்த தைக் கவனித்து, அவனுக்கு தேவையான சிகிச்சையளித்தார். ஒரு சில நாட்கள் கழித்து, அந்தப் புண் முற்றிலும் குணமான பிறகு, அவனுடைய பெற்றோர் வந்து, “உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை” என்று கூறினார்கள்.

தான் ஒரு ஊழியக்காரன் என்று சொல்லாமலேயே மூன்று மாதங்கள் அங்கிருந்த மக்களுக்கு உதவிகள் செய்தார். அது இரகசியமில்லை. அவரிடம் அதுபற்றி யாரும் கேட்கா ததால் சொல்லவில்லை. அடுத்த மூன்று மாதங்கள் எல்லாம் நன்றாக அமையவேண்டுமென ஜெபித்தார்.



கிம் சன், 1000 நற்செய்தியாளர்கள் இயக்கத்தின் துணை இயக்குனராக இருக்கிறார்.

*அடுத்த வாரம் அதிகம் வாசிக்கவும்.*